செய்தி வெளியீடு எண்:240 நாள்:29.04.2021

# செய்தி வெளியீடு

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் தமிழ்த் தொண்டைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் நாள் தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாட தமிழ்நாடு அரசால் ஆனையிடப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் பாவேந்தர் பாரதிதாசனின் 130ஆவது பிறந்தநாளினை 29.04.2021 ஆம் நாளன்று தீ நுண்மி இரண்டாவது அலைக் காரணமாக இணைய வழியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையுரையும், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திரு.ம.சி தியாகராசன் அவர்கள் வரவேற்புரையும் நிகழ்த்தினர். முனைவர் பால. இரமணி அவர்கள் எங்கும் தமிழே ஆகுக என்ற தலைப்பிலும், முனைவர் ந.அருள் அவர்கள் பாாவந்தர் வழி நடப்போம் என்ற தலைப்பிலும், முனைவர் உலகநாயகி பழனி அவர்கள் பைந்தமிழ் பாவேந்தம் தலைப்பிலும், திரு.பழ.பாசுகரன், திரு.கோ.மணி, வழக்கறிஞர் முனீசுவரன் ஆகியோர் நாளைய தலைமுறையினரின் நம்பிக்கை பாவேந்தர் என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர். மேலும் முனைவர் ச.சச்சிதானந்தம் (பிரான்சு), திரு.பொ.இராசேந்திரன் (மலேசியா), திரு.செல்வக்குமார் பெரியசாமி (செருமன்) ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி தே. செயசோதி அவர்களின் நன்றியுரையோடு விழா இனிதே முடிந்தது. இந்நிகழ்ச்சியை இணைய வழியில் சென்னை வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.பன்னிருகை வடிவேலன் அவர்கள் ஒருங்கிணைப்பு செய்தார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**